# மண்புமிகு தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் முன்பாக, திருப்பூர்.

**ந.க. எண்: /2020**

எம்.கார்த்திபன் (வயது 34),
56, மேட்டான்காட்டு வலசு,
வள்ளியரச்சல் சாலை,
முத்தூர் (அஞ்சல்),
திருப்பூர் . . . மனுதாரர்

**- எதிரிடை-**

நிர்வாகம்,
Fair Export,
10/320, கணபதி பாளையம் சாலை,
கே.என்.பாளையம், வீரபாண்டி (அஞ்சல்),
திருப்பூர் - 641 605 . . . எதிர்மனுதாரர்

## தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 2(A)(1)- ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனு:-

1. மனுதாரர் மேற்படி முகவரியில் தனது தாய் தந்தையுடன் குடியிருந்து வருகிறார்.

2. மனுதாரர் மேற்படி எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் கடந்த 22-09-2017-ம் தேதிய வேலை நியமன உத்திரவு 06-10-2017-ம் தேதி முதல் அக்கவுண்டன்டாக பணிக்கு சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வந்தார். மனுதாரருக்கு வழங்கப்பட்ட முதல் மாதச் சம்பளம் ரூ.27,000/- ஆகும். மனுதாரரின் பிறந்த தேதி 13-12-1986, வயது 34 ஆகும்.

3. மேற்படி எதிர்மனுதாரர் நிர்வாகம் ஆயத்த ஆடைகளை ~~வாங்கி~~ விற்கும் இந்தியா மற்றும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்கும் மிகப்பெரிய நிறுவனம் ஆகும். எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் மனுதாரர் உட்பட 10-க்கும் மேற்பட்ட தொழிலாளிகள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் மனுதாரர் தொடர்ந்து எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் நல்லமுறையில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகாமல் பணிபுரிந்து வந்தார்.

4. இவ்வாறிருக்கையில் எதிர்மனுதாரர் நிர்வாகம் நிர்ணையிக்கும் பொருள்களை ஏற்றுதல் மற்றும் இறக்குதல் வேலை மற்றும் கார்டன் பெட்டிகளில் நம்பர் போடும் வேலை ஆகியவற்றையையும் தனது அன்றாட வேலைகளோடு செய்து வந்தார். மனுதாரர் தனது பணிகாலங்களை நல்லமுறையில் எந்தொரு குறைபாடுகளும் இல்லாமல் மேல் அதிகாரிகளின் உத்திரவுகளுக்கு கீழ்படிந்து பணி செய்து வந்தார்.இந்நிலையில் மனுதாரருக்கு ஏற்பட்ட சாலை விபத்தில் அவருடைய இடுப்பு மற்றும் விலா எலும்பு பிரச்சினை ஏற்பட்டதால் தனக்கு ஒதுக்கப்படும் கணக்காளர் வேலை போக சொல்லப்படும் இதர வேலைகளை செய்ய கஷ்டமாக இருப்பதை சுட்டிக்காட்டி மேற்படி தனக்கு கூடுதலாக ஒதுக்கப்படும் பணியினை விலக்கிக்கொள்ள வேண்டுமாயும் கோரியும் ஏற்காத எதிர்மனுதாரர் நிர்வாகம் கடந்த 03-08-2018-ம் தேதி முதல் வாய்மொழி மூலமாக வேலை நீக்கம் செய்தது.

5. இதனால் அதிர்ச்சியடைந்த மனுதாரர் எந்தவித காரணமின்றி எதிர்மனுதாரர் நிர்வாகம் தன்னை சட்டத்திற்கு புறம்பாக 03.08.2018-ம் தேதி முதல் செய்த வாய்மொழி பணி நீக்கத்தை கைவிட்டு மீண்டும் பணியும் பணி கொடுக்க மறுத்த காலத்திற்கு உண்டான பின்சம்பளம் மற்றும் இதர பணப்பலன்களை கோரியும் மனுதாரர்

[redacted]

தொடர்ச்சியாக கோரி வந்ததை கண்டுக்கொள்ளாத எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் பணியின்மை மற்றும் கடும் பொருளாதார சுமையால் மனுதாரர் மிகவும் கஷ்ட சூழலில் வாழ்ந்து வருகிறார்.

6. மேற்படி எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை கடந்த 03-08-2018-ம் தேதி முதல் சட்டத்திற்கு புறம்பாக வாய்மொழி வேலை நீக்கம் செய்ததினால் எந்தவிதமான வருமானமும், வேலையும் இல்லாமல் குடும்பத்துடன் மிகவும் கஷ்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்.

7. இவ்வாறு மேற்படி நிர்வாகத்தின் செயலானது இந்திய தொழில் தகராறு சட்டம் 1947 பிரிவு 25(f)-ன் படி எதிரானது ஆகும்.

8. மனுதாரர் மேற்படி தனது கோரிக்கைகளை எதிர்மனுதாரர் நிர்வாகத்துடன் தொடர்ச்சியாக கோரி வந்த பொழுதும் அதை அவர்கள் கண்டுகொள்ளாததால் கனம் நீதிமன்றத்தின் முன் இந்த மனுவை சமர்ப்பிக்கிறார். மேலும் குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளும் மற்றும் உரிய நீதிமன்ற எல்லைக்குள்ளும் இந்த மனுவை தாக்கல் செய்கிறார்.

9. இம்மனுவில் தேவைப்படும் பட்சத்தில் ஏதேனும் திருத்தலோ, சேர்த்தலோ, நீக்கமோ ஏற்படும் பட்சத்தில் அதை செய்வதற்குரிய உரிமையை மனுதாரர் இங்கு தக்க வைத்துக்கொள்கிறார்.

மேலே கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் 03-08-2018-ம் தேதி செய்த வாய்மொழி வேலை நீக்கத்தை கைவிட்டு மீண்டும் அவருக்கு தொடர்ச்சியான சர்வீசுடன் கூடிய பணியும் பணியில்லா காலத்துக்கு உண்டான ஊதிய உயர்வுடன் கூடிய பின்சம்பளம் மற்றும் இதர சட்ட விளைவுறு பலன்கள் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் தர சமரச நடவடிக்கையில் ஈடுபட ஆவணம் செய்யவேண்டுமாய் கனம் அதிகாரி முன் பிரார்த்திக்கப்படுகிறது.

மனுதாரர்

## சரிப்பார்த்தல் உறுதிமொழி

மேலேக்கண்ட சங்கதிகள் யாவும் என்னால் சரிப்பார்த்து உண்மையென உறுதி கூறி இன்று 2-11-2020ம் தேதி திருப்பூர் - கையொப்பம் செய்தேன்.

மனுதாரர்

[redacted]

தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் முன்பாக, கோயமுத்தூர்

ந.க.எண்.269/2020

M.கார்த்திபன் (வயது – 34)
56, மேட்டான்காட்டு வலசு
வள்ளியரச்சல் சாலை
முத்தூர் அஞ்சல், திருப்பூர் ..... மனுதாரர்

எதிரிடை

நிர்வாகம்,
ஃபேர் எக்ஸ்போர்ட்
10/320, கணபதிபாளையம் சாலை
கே.என்.பாளையம், வீரபாண்டி அஞ்சல்
திருப்பூர் - 641 605 ..... எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரை</u>

எதிர்மனுதாரர் பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்வதாவது:

1. மனுதாரர் மனு பொய்யானது, உண்மைக்கு புறம்பான சங்கதிகளை திரித்து புனையப்பட்டு கெட்ட ஆதாயம் தேடும் நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகும்.

2. மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரரால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவைகளை தவிர, ஏனைய சங்கதிகளை எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். மேலும் மனுதாரரே அவற்றை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3. மனுதாரர் மனு பத்தி 2ல் கூறப்பட்டுள்ள சங்கதிகளான மனுதாரர் 22.09.2017ம் தேதி வேலை நியமன உத்தரவின் மூலம் பணியமர்த்தப்பட்டார் என்பதும், மனுதாரர் 06.10.2017ம் தேதிமுதல் பணியில் சேர்ந்தார் என்பதையும் எதிர்மனுதாரரால் மறுக்கப்படவில்லை. மனுதாரருக்கு முதல் மாத சம்பளமாக ரூ.27,000/-ம் வழங்கப்பட்டது என்பதை மனுதாரர் நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

4. மனுதாரர் மனு பத்தி 3ல் கூறப்பட்டுள்ள சங்கதிகளான எதிர்மனுதாரர் நிறுவனம் ஆயத்த ஆடைகளை வாங்கி விற்கும், இந்தியா மற்றும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நிறுவனம் என்பதையும், எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் மனுதாரர் உட்பட 10 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்பதையும், மனுதாரர், எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் எவ்வித குற்றச்சாட்டுகளுக்கும் பணிபுரிந்து வந்தார் என்பதையும் மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

5. மனுதாரர் மனு பத்தி 4ல் கூறியுள்ள சங்கதிகளான எதிர்மனுதாரர் நிர்வாகம் நிர்ணயிக்கும் பொருட்களை ஏற்றுதல் மற்றும் இறக்குதல் வேலை மற்றும் கார்டன் பெட்டிகளில் நம்பர் போடும்வேலை ஆகியவற்றையும் தனது அன்றாட வேலைகளோடு செய்து வந்தார் என்பதும், மனுதாரர் தனது பணிக்காலத்தில் எந்தவொரு குறைபாடுகளும் இல்லாமல் மேலதிகாரிகளின் உத்தரவுகளுக்கு கீழ்படிந்து பணி

[redacted]

செய்து வந்தார் என்பதையும், எதிர்மனுதாரர் நிர்வாகம் வன்மையாக மறுக்கிறது. மேலும் மனுதாரரே நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

6. இந்நிலையில் மனுதாரருக்கு ஏற்பட்ட சாலை விபத்தில் அவருக்கு இடுப்பு மற்றும் விலா எலும்பு பிரச்சினை ஏற்பட்டதால் தனக்கு ஒதுக்கப்படும் கணக்காளர் வேலை போக சொல்லப்படும் இதர வேலைகளை செய்ய கஷ்டமாக இருப்பதை சுட்டிக்காட்டி மேற்படி தனக்கு கூடுதலாக ஒதுக்கப்படும் பணியினை விலக்கிக் கொள்ள வேண்டுமாய் கோரியும், ஏற்காத எதிர்மனுதாரர் நிர்வாகம் கடந்த 03.08.2018ம் தேதிமுதல் வாய்மொழி மூலமாக வேலை நீக்கம் செய்தது என்பது எதிர்மனுதாரர் நிர்வாகம் வன்மையாக மறுக்கிறது. மேலும் சந்தேகங்களுக்கு இடமில்லாமல் மனுதாரரே அவற்றை நிருபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

7. மனுதாரர் மனு பத்தி 5, 6 மற்றும் 7 ல் கூறியுள்ள சங்கதிகளான மனுதாரர் தொடர்ச்சியாக வேலைக்கோரி வந்ததை கண்டுகொள்ளாத எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் பணியின்மை மற்றும் கடும் பொருளாதார சுமையால் மனுதாரர் மிகவும் கஷ்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார் என்பதும், எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரரை 03.08.2018ம் தேதிமுதல் சட்டத்திற்கு புறம்பாக வாய்மொழி வேலை நீக்கம் செய்ததால், மனுதாரர் வேலை இல்லாமல் கஷ்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார் என்பதும், நிர்வாகத்தின் செயலானது இந்திய தொழிற்தகராறு சட்டம், 1947 பிரிவு 25(எப்)ன்படி எதிரானது என்பதையும் எதிர்மனுதாரர் நிர்வாகம் வன்மையாக மறுக்கிறது. மேலும் மனுதாரரே நிருபிக்க் கடமைப்பட்டவர் ஆவார்.

8.. மனுதாரர் மனு பத்தி 8 ல் கூறியுள்ள சங்கதிகளான மனுதாரர் தனது கோரிக்கைகளை எதிர்மனுதாரர் நிர்வாகத்திடம் தொடர்ச்சியாக கோரி வந்தபோதும், அதை அவர்கள் கண்டு கொள்ளாததால் இந்த மனுவை சமர்ப்பிக்கிறார் என்பதும், இந்த மனு உரிய காலவரையறைக்குள்ளும் சமாப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், எதிர்மனுதாரரின் நிர்வாகத்தால் மறுக்கப்படுகிறது.

9. எதிர்மனுதாரர் நிர்வாகம் பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில், எதிர்மனுதாரர் நிர்வாகமானது buying office ஆக செயல்பட்டு வருகிறது. எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் எந்தவிதமான உற்பத்தி செயல்பாடுகளும் நடைபெறுவதில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகமானது buyer - களிடமிருந்து உரிய ஆர்டர்களை பெற்று ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் பல்வேறு நிறுவனங்களுக்கு உரிய ஆர்டர்களை பெற்று தருவதாகும். மேற்படி ஆர்டர்களை பெற்று ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்த ஆயத்த ஆடைகளை அவர்களே நேரடியாக buyer களுக்கு அனுப்பிவிடுவார்கள். உற்பத்தி செய்யப்பட்ட எந்த ஆயத்த ஆடைகளும் எதிர்மனுதாரர் நிர்வாக buying அலுவலகத்திற்கு கொண்டுவரப்படுவதில்லை. எனவே அங்கு பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குதல் போன்ற செயல்கள் நடைபெறுவதில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகத்தில்

[redacted]

நிர்வாக அலுவலக வேலைகள் மட்டுமே நடைபெறுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கணக்காளர் என்ற நிர்வாக பதவியில் பணி செய்து வந்தார். மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தில் இடுப்பு மற்றும் விலா எலும்புகளின் பாதிப்புகளால் அவரது இருக்கையில் அமர்ந்து அவரால் தொடர்ச்சியாக பணி செய்ய இயலாததால் அவர் தாமாகவே முன்வந்து தம்மால் தொடர்ச்சியாக அமர்ந்து வேலை செய்ய இயலவில்லை என்று கூறி வேலையை வேண்டாம் என்று கூறி சென்றுவிட்டார். இந்நிலையில் மனுதாரர் சட்டத்திற்கு புறம்பாக கெட்ட ஆதாயம் தேடும் நோக்கில், எந்த முகாந்திரமும் இல்லாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

10. மனுதாரர், எதிர்மனுதாரர் நிர்வாக buying அலுவலகத்தில் வரவு செலவுகளை கையாளும் Accountant என்ற பொறுப்பில் பணி செய்து வந்ததால் அவர் தொழிற்தகராறுகள் சட்டம் 1947 பிரிவு 2(s)(i)ன் கீழ் எந்தவொரு மனுவையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அருகதையற்றவர் ஆவார்.

எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து, உத்தரவு செய்ய வேண்டுமாய் எதிர்மனுதாரர் நிர்வாகம் பிரார்த்தித்துக் கொள்கிறது.

எதிர்மனுதாரர்

எதிர்மனுதாரர்

## சரிபார்த்தல்

மேலே கூறப்பட்டுள்ள விஷயங்கள் யாவும் என் அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை, சரியானவை என்று உறுதி கூறி நான் மகேசன் இன்று நான் திருப்பூரில் வைத்து கையொப்பமிடுகிறேன்.

எதிர்மனுதாரர்

[redacted]

தொழிலாளர் உதவி ஆணையர்
அவர்கள் முன்பாக,
கோயமுத்தூர்

ந.க.எண்.269/2020

M.கார்த்திபன் (வயது -- 34)
56, மேட்டான்காட்டு வலசு
வள்ளியரச்சல் சாலை
முத்தூர் அஞ்சல், திருப்பூர்

.... மனுதாரர்

எதிரிடை

நிர்வாகம்,
∴.பேர் எக்ஸ்போர்ட்
10/320, கணபதிபாளையம் சாலை
கே.என்.பாளையம்,
வீரபாண்டி அஞ்சல்
திருப்பூர் - 641 605

..... எதிர்மனுதாரர்

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல்
செய்யப்படும் எதிருரை</u>

தாக்கல் நாள் :

<u>தொடர்பு முகவரி</u>

[redacted]